T

# முதல் இடைப்பருவத் தேர்வு - ஜூலை 2019

Thirunelveli **பதினொன்றாம் வகுப்பு** District

**தமிழ்**

**நேரம் : 1.15 மணி** **மதிப்பெண்கள்:45**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.** **8 x 1 = 8**

1. கபாட புரங்களைக் காவு கொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள் -

*அடிமோனையைத் தேர்வு செய்க.*

(அ) கபாட புரங்களை - காவு கொண்ட
(ஆ) காலத்தால் - கனிமங்கள்
(இ) கபாட புரங்களை - காலத்தால்
(ஈ) காலத்தால் - சாகாத

2. நூலுக்கு முன் சொல்லப்படுவது
(அ) நூன்முகம் (ஆ) அணிந்துரை
(இ) முகவுரை (ஈ) தந்துரை

3. தமிழ் நாட்டின் மாநில மரம்
(அ) மாமரம் (ஆ) தென்னைமரம்
(இ) பனைமரம் (ஈ) கொய்யாமரம்

4. உலக சிட்டுக் குருவிகள் தினம்
(அ) மார்ச் - 20 (ஆ) மார்ச் - 21
(இ) மே - 12 (ஈ) ஜூன் - 20

5. விசா என்னும் சொல்லின் தமிழாக்கம் தருக.
(அ) கடவுச் சீட்டு (ஆ) நுழைவுச் சீட்டு
(இ) நுழைவு இசைவு (ஈ) பிரயாணம்

6. ஜி.யு. போப் திருக்குறளையும் , திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
*(ஏற்ற வினா அமைத்திடுக)*

7. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
***கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்.***

8. மாநகர் , ஐந்தும் - இலக்கணக் குறிப்பினை பொருத்துக.
(அ) எண்ணும்மை , இடைத்தொடர்
(ஆ) உரிச்சொற்றொடர் , முற்றும்மை
(இ) உரிச்சொற்றொடர் , எண்ணும்மை
(ஈ) பெயர்த் தொடர் , முற்றும்மை

**II. எவையேனும் நான்கிற்கு மட்டும் விடையளி.** **4 x 2 = 8**

9. பேச்சு மொழி , எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
10. உள்ளான் பறவை எவ்வாறு அமர்ந்திருக்கும்?
11. பொதுப்பாயிரத்தின் இலக்கணம் யாது?
12. மழைக்கால மலர்கள் யாவை?
13. மதிப்புக் கூட்டுப் பொருள்கள் என்றால் என்ன? எ.கா தருக.

**III. எவையேனும் ஐந்திற்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 3 = 15**

14. ஐந்து விவசாய மந்திரங்கள் யாவை?
15. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது?
16. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
17. சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்தும்?
18. ***அணிந்துரை*** - புணர்ச்சி விதி கூறுக?
19. பூச்சிக் கொல்லி மருந்து தாவரத்திற்குத் தெளிப்பதனால் ஏற்படும் தீய விளைவுகள் யாவை?

**IV.** **1 x 4 = 4**

20. ***"ஆக்கியோன் பெயரே"*** - என வரும் நன்னூல் பாயிரம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 5 = 10**

21. நன்னூல் பொதுப்பாயிரம் , சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
22. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.
23. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்த வற்றைத் தொகுத்து எழுதுக.

சிவக்குமார். மு. ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப, வல்லம்.

★★★★★★